**மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**அசல் வழக்கு எண். 186/2022**

1. ராதிகா
2. நதியா ........ வாதிகள்

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு
2. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
   வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
   கோபிசெட்டிபாளையம்
3. வட்டாட்சியர் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   சத்தியமங்கலம்
4. வருவாய் ஆய்வாளர் அவர்கள்,
   வருவாய் ஆய்வாளர் அலுவலகம்,
   சத்தியமங்கலம்
5. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,
   கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,
   இக்கரை நெகமம் கிராமம்
6. வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள்,
   ஈரோடு -12
7. விஜயா
8. ஜானகி
9. கிருஷ்ணன்
10. K.விஜய்
11. கௌரி ........ பிரதிவாதிகள்

**மதிப்பீட்டு விபரம்**

1. தாவாவின் தன்மை : விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா

| | | |
|---|---|---|
| 2. தாவாச் சொத்து மதிப்பு | : | ரூ.5,000/- + ரூ.1,000/- = ரூ.6,000/- |
| 3. செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைவில்லை | : | ரூ.150/- + ரூ.30/- = ரூ.180/- |
| 4. சட்டப்பிரிவும் உட்பிரிவும் | : | நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டப்பிரிவு 25(d) மற்றும் 27(c)-ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

/ உண்மைநகல் /

/உத்தரவுப்படி /

தலைமை எழுத்தர்

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் டிசம்பர் மாதம்-12-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 26-ம் நாள்)**

**அசல் வழக்கு எண். 186/2022**

**CNR No.TNED060002182022**

1. ராதிகா, த/பெ.இறந்த இளங்கோவன், க/பெ.மணிவாசகம், இந்து, வயது சுமார் 36 வருடம், வசிப்பது கதவு எண்.4/179-1, காமராஜ் நகர், சிக்கம்பட்டி கிராமம், பெரியகாடம்பட்டி அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் - 636502

2. நதியா, த/பெ.இறந்த இளங்கோவன், க/பெ.ஜீவா, இந்து, வயது சுமார் 40 வருடம், வசிப்பது கதவு எண்.4/179-1, காமராஜ் நகர், சிக்கம்பட்டி கிராமம், பெரியகாடம்பட்டி அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் - 636502

........ வாதிகள்

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர் அவர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு
2. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கோபிசெட்டிபாளையம்
3. வட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம், சத்தியமங்கலம்
4. வருவாய் ஆய்வாளர் அவர்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், சத்தியமங்கலம்
5. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், இக்கரை நெகமம் கிராமம்
6. வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள், ஈரோடு -12
7. விஜயா, க/பெ.சுந்தரம், வயது சுமார் 65, வசிப்பது க.எண்.2/106, செங்கல்பேட்டை - 2, நரசோதிப்பட்டி, சேலம் - 636 004
8. ஜானகி, க/பெ.கிருஷ்ணன், வயது சுமார் 55, வசிப்பது கதவு எண்.1/966, திருவள்ளுவர் நகர், கெஞ்சனூர், இக்கரை நெகமம் கிராமம், சத்தியமங்கலம் அஞ்சல் மற்றும் வட்டம், ஈரோடு மாவட்டம் - 638 401
9. கிருஷ்ணன், த/பெ.ராமசாமி, வயது சுமார் 60, வசிப்பது 161A, ஸ்ரீபதி நகர், பூந்தோட்டம், 15, வேலம்பாளையம், திருப்பூர் - 641 652

10. K.விஜய், த/பெ.கிருஷ்ணன், வயது சுமார் 40, வசிப்பது 159/24G, ஸ்ரீபதி நகர், 15, வேலம்பாளையம், திருப்பூர் - 641 652

11. கௌரி, க/பெ.வேல்முருகன், வயது சுமார் 35, வசிப்பது முத்துக்காளிப்பட்டி, முத்துக்காளிப்பட்டி அஞ்சல், ராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம் - 637 401

........ பிரதிவாதிகள்

கடந்த 16.01.2022-ம் தேதியன்று ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கதவு எண்.1/966, இக்கரை நெகமம், திருவள்ளுவர் நகர் முகவரியில் வசித்து வந்து, காலம்சென்ற இளங்கோவன் என்பவரின் சட்டப்பூர்வமான வாரிசுகள் வாதிகள் தான் என விளம்புகை செய்யக் கோரியும், வாதிகளுக்கு ஆதராவாக இளங்கோவனின் வாரிசுச் சான்றிதழை 3-ம் பிரதிவாதியானவர் வாதிகளுக்கு வழங்கிட வேண்டி, 3-ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துககட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | - | 06.09.2022 |
| வழக்கு மூலம் | - | 16.01.2022, 04.02.2022, 07.02.2022, 10.02.2022, 23.02.2022, 08.03.2022, 08.04.2022, 18.04.2022, 29.07.2022-ம் தேதிகளிலும் பின்னிட்ட ஒவ்வொரு தேதியிலும் சத்தியமங்கலம் கிராமத்தில் வழக்கு மூலம் உண்டாகியுள்ளது. |
| வழக்கின் மதிப்பு | - | ரூ.5,000/- + ரூ.1,000/- = ரூ.6,000/- தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் சட்டப்பிரிவு 25(d) மற்றும் 27(c)-ன்படி ரூ.150/-+ ரூ.30/-=ரூ.180/-ன் படி நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

இந்த வழக்கு கடந்த 02.12.2025-ந் தேதியன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்த பொழுது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ராஜா, அவர்கள் ஆஜராகியும், 8-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.N.நபீஸ் உல்லா, அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 7 மற்றும் 9 முதல் 11-ம் பிரதிவாதிகள் தரப்பில், ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

## தீர்ப்பாணை

**1) அசல் வழக்கானது முழுவதுமாக அனுமதிக்கப்பட்டு, கடந்த 16.01.2022-ம் தேதியன்று காலம்சென்ற இளங்கோவனின் சட்டப்பூர்வமான வாரிசுகள் வாதிகள் என விளம்புகை செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.**

**2) வாதிகளுக்கு ஆதரவாக இளங்கோவனின் வாரிசுச் சான்றிதழை 3-ம் பிரதிவாதி 2 மாத காலத்திற்குள் வாதிகளுக்கு வழங்கிட செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.**

**3) தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு செலவுத்தொகையை தரப்பினர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது**

## செலவுத் தொகை பட்டியல்

வாதிகள் தரப்பு (Certified cost) (Cost list filed)

பிரதிவாதிகள் தரப்பு (No cost)

| | | | |
|---|---|---|---|
| 1. | தாவாவுக்கு ஸ்டாம்பு | 150 | 00 |
| 2. | வக்காலத்து ஸ்டாம்பு | 10 | 00 |
| 3. | கட்டளைகளைச் சேர்ப்பிப்பதற்கு ஸ்டாம்பு, நீதிமன்ற அஞ்சல் | 50 | 00 |
| 4. | கட்டளை தயாரிப்பு கூலி | 50 | 00 |
| 5. | ஆதரவுகளுக்கு ஸ்டாம்பு | 30 | 00 |
| 6. | தயாரிப்பு சிலவு | 50 | 00 |
| 7. | நீதிமன்ற ஆணையர் கட்டணம் | 00 | 00 |
| 8. | வழக்குரைஞரின் கட்டணம் | 1500 | 00 |
| | ஆக மொத்தம் | 1840 | 00 |

## சொத்து விபரம்

- இல்லை -

2025-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்றத்து முத்திரையும் இடப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.12.12 16:27:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

DECREE

O.S.186 / 2022

12 / 12 /2025